District Munsif Court, Palani.
I.A.No.1-2024 in O.S.No.58-2024

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

முன்னிலை: சு. அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

இ.ம.எண்.1/2024

இன்

அ.வ.எண்.58/2024

K. வடிவேல் ....மனுதாரர்/வாதி

// எதிர் //

1. பழனியம்மாள்

2. செந்தில்குமார் ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும், கடந்த 22.09.2025 ஆம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் **திரு.V. இராஜமாணிக்கம்,** ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் **திரு.P.மதியழகன்,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

அசல் வழக்கு முடியும் வரை மனுச் சொத்தின் அமைப்பையும், தன்மையையும் மாற்றக்கூடாது என எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டி

Date:08.09.2025

உரிமையியல் நடைமுறை சட்டம் **கட்டளை 39 விதி 1, 2, 3** மற்றும் **பிரிவு 151**–ன் கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம் :

2.1. மனுதாரருக்கு மனு சொத்துக்கள் 11.11.1998 ஆம் தேதிய கிரைய ஆவணப் படி சர்வசுதந்திரப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும் என்றும், மனுதாரர் அதன் தென்புறமாக, அரசின் உதவியுடன் சிமெண்ட் கான்கிரீட் கூரை வீடு ஒன்றைக் கட்டி உள்ளார் என்றும், அதுபோக வடபுறம், சிமெண்ட் சீட் வேய்ந்த வீடு ஒன்றை கட்டி அனுபவித்து வருகிறார் என்றும், மனுதாரருடைய மனைவி காளியம்மாளுக்கு, 1ம் எதிர்மனுதாரர் உடன்பிறந்த தங்கை என்றும், 1ம் எதிர்மனுதாரரின் கணவர் 2ம் எதிர்மனுதாரர் ஆவார் என்றும், சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு 2ம் எதிர்மனுதாரால் கைவிடப்பட்ட 1ம் எதிர்மனுதாரர் அவரது மூன்று பிள்ளைகளுடன் மனுதாரரிடமும், அவரது மனைவியிடமும் அடைக்கலம் தேடி வந்தார் என்றும், மனுதாரர் 3 பிள்ளைகளுடன் அநாதரவாக வந்து நின்ற 1ம் எதிர்மனுதாரரை மனுச் சொத்தான சிமெண்ட் கூரை வேய்ந்த வீட்டில் தங்கிக் கொள்ளுமாறு ஆதரவு செய்து கொடுத்தார் என்றும், 1ம் எதிர்மனுதாரரும் தாவா வீட்டில் மனுதாரருடைய அனுமதி உடன் குடியிருந்து வருகிறார் என்றும், சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர், 1 ம் எதிர்மனுதாரருக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டு இருவரும் சேர்ந்து கொண்டனர் என்றும், எதிர்மனுதாரர்கள் கூலி வேலைக்கு சென்று நல்ல முறையில் சம்பாதித்து குடும்பம் நடத்தி வருகின்றனர் என்றும், மேற்கொண்ட சூழ்நிலையில் எதிர்மனுதாரர்கள்

இருவரும் தனியாக வீடு பார்த்து வாழ்ந்து கொள்ள முடியும் என்பதாலும், மனுதாரர் குடியிருப்பு வசதிக்காகவும் தாவா வீட்டை காலி செய்து கொடுக்குமாறு மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரை கேட்டுக் கொண்டார் என்றும், அதற்கு முதலில் இரண்டு மாத கால அவகாசம் கேட்ட 1ம் எதிர்மனுதாரர், பிற்பாடு 2ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து கொண்டு தாவா வீட்டை காலி செய்ய முடியாது என தகராறு செய்து வருகின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2. மனுதாரர் கடந்த 20.01.2024 ஆம் தேதி அன்று மனுதாரர் வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாரர்களுக்கு பதிவஞ்சல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார் என்றும், மேற்படி நோட்டீஸில் தாவா வீட்டில் 1ம் எதிர்மனுதாரர் குடியிருந்து வருவதற்கான அனுமதியை மனுதாரர் ரத்து செய்துவிட்டதால் நோட்டீஸ் கிடைத்த ஒரு மாத காலத்திற்குள் தாவா வீட்டை காலி செய்து கொடுக்குமாறு மனுதாரர் எதிர்மனுதாரர்களை கேட்டுக் கொண்டார் என்றும், மேற்படி நோட்டீசை 24.01.2024 அன்று பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர்கள் அதற்கு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றும், ஒரு மாதம் கழித்த பின்னரும் தாவா வீட்டை காலி செய்து சுவாதீனம் ஒப்படைக்கவும் முன்வரவில்லை என்றும், இத்தகைய சூழ்நிலையில் கடந்த 23.03.2024 அன்று காலை சுமார் 7 மணியளவில் எதிர்மனுதாரர்கள் இருவரும் சேர்ந்து கொண்டு தாவா வீட்டை காலி செய்ய முடியாது என்றும், கோர்ட்டுக்கு போனாலும், எதிர்மனுதாரர்களை ஒன்றும் செய்ய முடியாது என்றும், வீட்டை காலி செய்யச் சொன்னால் இனி நடப்பதை வேறு என பசாரித்தனர் என்றும், எதிர்மனுதாரர்களின் அத்துமீறிய அடாவடித்தனமான

நடவடிக்கைகளினால் மனுதாரர் பயத்திற்கும் வேதனைக்கும் ஆளாகியுள்ளார் என்றும், மனுதாரருடைய அனுமதியின் பெயரில் குடியிருக்கும் தாவா வீட்டில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித அதிகாரமும் உரிமையும் இல்லை என்றும், தாவா வீட்டின் வீட்டு வரி, மின் இணைப்பு, வரி வகையறாக்கள் அனைத்தும் மனுதாரர் பேரிலேயே இருந்து வருகிறது என்றும், மனுதாரர் தாவா வீட்டை எதிர்மனுதாரர்கள் காலி செய்து சுவாதீனம் ஒப்படைக்க கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரருக்கு இவ்வழக்கில் முதல் தோற்ற வழக்கும், வழக்கின் இருநிலை சமன்பாடும் மனுதாரருக்கு சாதகமாகவே இருக்கிறது என்றும், எனவே அசல் வழக்கு முடியும் வரை மனுசொத்தின் அமைப்பையும், தன்மையையும் மாற்றக்கூடாது என எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்து கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. எதிருரையின் சுருக்கம் :</u>

3.1. மனுதாரர் கடந்த 11.11.1998 ஆம் தேதியில் தாவா காலியிடமாக இருந்த இடத்தை கிரையம் பெற்றார் என்றும், எதிர்மனுதாரர்கள் தாவா இடத்தில் கடந்த 1999 ஆம் வருடம் மனுதாரரின் அனுமதியுடன் கூரைச்சாலை அமைத்துக் குடியேறினார்கள் என்றும், மனுதாரரின் மனைவி இந்த 1ம் எதிர்மனுதாரரின் உடன் பிறந்த அக்காள் என்பதாலும் மனுதாரர் தாவா இடத்தை எதிர்மனுதாரர்களுக்கு சிறிது காலம் குடியிருங்கள் பின்னர் தாவா இடத்தை கிரையம் செய்து கொடுத்து வருகிறோம் என்று வாக்குறுதியின் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள்

தொடர்ந்து தற்போது வரை கூரை வீடு கட்டி அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகின்றனர் என்றும், மேற்படி தாவா இடத்தில் சுமார் 25 வருடங்களுக்கு மேல் தாவா இடத்தில் மேற்படி வீடு வடபுறம் கட்டி எதிர்மனுதாரர்கள் குடியிருந்து வருகின்றனர் என்றும், முதலில் 10 வருடங்கள் தாவா காலியிடத்தில் கூரைச்சாளை அமைத்து குடியிருந்து வந்து பின்னர் 15 வருடங்களுக்கு முன்னர் கூரைச்சாளையை பிரித்து விட்டு சிமெண்ட் காங்கிரீட் வீடு எதிர்மனுதாரர்களால் ரூ.10,00,000/- (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) வரை செலவு செய்து தற்போது வரை மேற்படி வீட்டில் குடியிருந்து அனுபவ சுவாதீனத்தில் தொடர்ந்து இருந்து வருகிறார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள் மனுதாரரிடம் தாவா இடத்தை கிரையம் செய்து கொடுக்க தொடர்ந்து கேட்டு வந்தும் மனுதாரர் கிரையம் செய்து தருவதாக கூறி காலம் கடத்தி வந்தார் என்றும், 1ம் எதிர்மனுதாரரின் அக்காள் கணவர் கிரையம் செய்து கொடுத்து விடுவார் என்ற நம்பிக்கையில் மேற்படி சிமெண்ட் கான்கிரீட் வீட்டை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) செலவு செய்து கட்டி மேற்படி வீட்டில் குடியிருந்து வருகின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2. அதனைத் தொடர்ந்து, தாவா இடத்தில் வாதி வடபுரம் வீடு கட்டுவதற்கு 1ம் எதிர்மனுதாரர் தான் விண்ணப்பித்து வடபுரம் உள்ள வீட்டையும் கட்ட உதவியுள்ளார் என்றும், கிரைய இடம் மனுதாரரின் பெயரில் உள்ளதால் பொய்யாக மனுதாரர் தான் மேற்படி இடத்தில் வீடுகள் கட்டியதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளார் என்றும், கடந்த 27.11.2023 ஆம் தேதியில் மனுதாரருடன் இந்த எதிர்மனுதாரர்கள் மேற்படி வீடு சம்பந்தமாகவும், தாவா வீட்டு இடத்தை கிரையம் செய்து கொடுக்கக்

கேட்டதில் பிரச்சனைகள் ஏற்பட்டு பழனி வட்டம், சாமிநாதபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததில், மனுதாரரின் இடத்தில் எதிர்மனுதாரர்கள் செலவு செய்து வீடு கட்டியுள்ளதால் வீட்டிற்கான செலவு ரூ.10,00,000/– யை மனுதாரர் கொடுப்பதாக போலீசார் முன்னிலையில் பேசி முடிக்கப்பட்டது என்றும், எதிர்மனுதாரர்கள் தாவா இடத்தின் தற்போதைய மதிப்பிற்கான தொகையை மனுதாரருக்கு கொடுப்பதாக கூறியதில் மனுதாரர் தனக்கு இரண்டு ஆண் மக்கள் இருப்பதாகவும், இடத்திற்கு பணம் வேண்டாம் என்றும், வீட்டிற்கு ஆன செலவு தொகையை கொடுத்து விடுவதாகவும் பேசி முடித்தார்கள் என்றும், ஆனால் மனுதாரர் அவ்வாறு செலவு தொகை கொடுக்க மறுத்ததால் மீண்டும் போலீசார் இந்த பிரச்சனை சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றம் சென்று முடிவு பெற்றுக் கொள்ளும்படி கூறி அனுப்பிவிட்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.3. அதனைத் தொடர்ந்து, மனுதாரர் இந்த பிரதிவாதிகளுக்கு 20.01.2024 ஆம் தேதியில் தனது வழக்கறிஞர் மூலம் பதிவஞ்சல் நோட்டீஸ் அனுப்பியுள்ளதாக கூறப்பட்ட நிலையில், இந்த எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித முன் அறிவிப்பும் வரவில்லை என்றும், தாவா இடம் மட்டும் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா இடத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு அனுமதியுடன் கட்டப்பட்ட வீடுகள் ஆகும் என்றும், தொடர்ந்து மேற்படி தாவா வீட்டில் எதிர்மனுதாரர்கள் குடியிருந்து அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகின்றனர் என்றும், மனுதாரருக்கு இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எவ்வித வழக்குமூலமும் கிடையாது என்றும், எனவே, இம்மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட

வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில், சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் எழுகின்ற பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

6. தீர்வு:

6.1. அசல் வழக்கு முடியும் வரை மனுச் சொத்தின் அமைப்பையும், தன்மையையும் மாற்றக்கூடாது என எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2. மனுதாரர் தரப்பில், மனு சொத்துக்கள் 11.11.1998 ஆம் தேதிய கிரைய ஆவணப் படி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும் என்றும், மனுதாரர் அதன் தென்புறமாக, அரசின் உதவியுடன் சிமெண்ட் கான்கிரீட் கூரை வீடு ஒன்றைக் கட்டி உள்ளார் என்றும், அதுபோக வடபுறம், சிமெண்ட் சீட் வேய்ந்த வீடு ஒன்றை கட்டி அனுபவித்து வருகிறார் என்றும், மனுதாரருடைய மனைவியின் உடன்பிறந்த தங்கையான 1ம் எதிர்மனுதாரர் சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு 2ம்

எதிர்மனுதாரரான அவரது கணவரால் கைவிடப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் அவரது மூன்று பிள்ளைகளுடன் மனுதாரரிடமும், அவரது மனைவியிடமும் அடைக்கலம் தேடி வந்ததால், 1ம் எதிர்மனுதாரரை மனுச் சொத்தான சிமெண்ட் கூரை வேய்ந்த வீட்டில் தங்கிக் கொள்ளுமாறு ஆதரவு செய்து கொடுத்தார் என்றும், 1ம் எதிர்மனுதாரரும் தாவா வீட்டில் மனுதாரருடைய அனுமதி உடன் குடியிருந்து வருகிறார் என்றும், சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர், 1ம் எதிர்மனுதாரருக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டு இருவரும் சேர்ந்து கொண்டனர் என்றும், எதிர்மனுதாரர்கள் கூலி வேலைக்கு சென்று நல்ல முறையில் சம்பாதித்து குடும்பம் நடத்தி வருகின்றனர் என்றும், மேற்கொண்ட சூழ்நிலையில் எதிர்மனுதாரர்கள் இருவரும் தனியாக வீடு பார்த்து வாழ்ந்து கொள்ள முடியும் என்பதாலும், மனுதாரர் குடியிருப்பு வசதிக்காகவும் தாவா வீட்டை காலி செய்து கொடுக்குமாறு மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரை கேட்டுக் கொண்டதில் தாவா வீட்டை காலி செய்ய முடியாது என தகராறு செய்து வருகின்றனர் என்றும், மனுதாரருடைய அனுமதியின் பெயரில் குடியிருக்கும் தாவா வீட்டில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித அதிகாரமும் உரிமையும் இல்லை என்றும், தாவா வீட்டின் வீட்டு வரி, மின் இணைப்பு, வரி வகையறாக்கள் அனைத்தும் மனுதாரர் பேரிலேயே இருந்து வருகிறது என்றும், மனுதாரர் தாவா வீட்டை எதிர்மனுதாரர்கள் காலி செய்து சுவாதீனம் ஒப்படைக்க கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே அசல் வழக்கு முடியும் வரை மனுசொத்தின் அமைப்பையும், தன்மையையும் மாற்றக்கூடாது என எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்து

கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

6.3. எதிர்மனுதாரர்கள் தரப்பில், எதிர்மனுதாரர்கள் தாவா இடத்தில் கடந்த 1999 ஆம் வருடம் மனுதாரரின் அனுமதியுடன் கூரைச்சாளை அமைத்துக் குடியேறினார்கள் என்றும், மனுதாரரின் மனைவி இந்த 1ம் எதிர்மனுதாரரின் உடன் பிறந்த அக்காள் என்பதாலும், மனுதாரர் தாவா இடத்தை எதிர்மனுதாரர்களுக்கு சிறிது காலம் குடியிருங்கள் பின்னர் தாவா இடத்தை கிரயம் செய்து கொடுத்து வருகிறோம் என்று வாக்குறுதியின் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள் தொடர்ந்து தற்போது வரை கூரை வீடு கட்டி அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகின்றனர் என்றும், மேற்படி தாவா இடத்தில் சுமார் 25 வருடங்களுக்கு மேல் தாவா இடத்தில் மேற்படி வீடு வடபுறம் கட்டி எதிர்மனுதாரர்கள் குடியிருந்து வருகின்றனர் என்றும், முதலில் 10 வருடங்கள் தாவா காலியிடத்தில் கூரைச்சாளை அமைத்து குடியிருந்து வந்து, பின்னர் 15 வருடங்களுக்கு முன்னர் கூரைச்சாளையை பிரித்து விட்டு சிமெண்ட் காங்கிரீட் வீடு எதிர்மனுதாரர்களால் ரூ.10,00,000/- (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) வரை செலவு செய்து கட்டி மேற்படி வீட்டில் குடியிருந்து வருகின்றனர் என்றும், தாவா இடம் மட்டும் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா இடத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு அனுமதியுடன் கட்டப்பட்ட வீடுகள் ஆகும் என்றும், தொடர்ந்து மேற்படி தாவா வீட்டில் எதிர்மனுதாரர்கள் குடியிருந்து அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகின்றனர் என்றும், எனவே, இம்மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

6.4. இம்மனுவில் முதலில், தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க, முதல் தோற்ற வழக்கு **(Prima facie Case)** உள்ளதா? என்பதையும், வசதியின் சமநிலை **(Balance of convenience)** உள்ளதா? என்பதையும், தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காதபட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு **(Irrepairable loss)** ஏற்பட வாய்ப்பு உள்ளதா? என்பதையும் முடிவு செய்ய வேண்டியதுள்ளது.

6.5. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, ஆவணங்கள் மற்றும் வழக்குக் கோப்புகளை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவாச் சொத்தை காலி செய்து நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் வாதியிடம் சுவாதீனம் ஒப்படைக்கும்படி உத்தரவிடக் கோரியும், தாவாச் சொத்தின் அமைப்பினையும், தன்மையையும் எதிர்மனுதாரர்கள் மாற்றக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது கடந்த 13.08.2025 ஆம் தேதி எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பில் மனுதாரர் முதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு வாதியின் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது என்பதை அறியமுடிகிறது. மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ம.சா.ஆ.1 ஆனது கடந்த 11.11.1998 ஆம் தேதியன்று மாரியம்மாள் மற்றும் திருமூர்த்தி ஆகியோர் மனுச் சொத்தை மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்ட கிரைய பத்திரம் ஆகும். ம.சா.ஆ.2 ஆனது மனுச் சொத்திற்கான வீட்டுவரி ரசீதுகள் ஆகும். ம.சா.ஆ.3 ஆனது மனுச் சொத்திற்கான மின்கட்டண ரசீது ஆகும். ம.சா.ஆ.4 ஆனது மனுதாரர்

எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ஆகும். ம.சா.ஆ.5 ஆனது வழக்கறிஞர் அறிவிப்பை எதிர்மனுதாரர்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டைகள் ஆகும். ம.சா.ஆ.6 ஆனது வழக்குச் சொத்திற்கான அரசின் வழிகாட்டு மதிப்பு ஆகும். ம.சா.ஆ.7 ஆனது வழக்குச் சொத்தைக் காட்டக்கூடிய மாதிரி வரைபடம் ஆகும். மேற்படி ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் மனுச் சொத்தானது மனுதாரருக்குப் பாத்தியப்பட்டு அவரால் அனுபவம் செய்து வரப்படுகிறது என்பதை அறியமுடிகிறது. தாவாச் சொத்தானது மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதை எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் தாவாச் சொத்தின் வடபுறம் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் கேட்டுக்கொண்டதின் பேரில் வடபுறம் உள்ள வீட்டையும் கட்ட உதவியுள்ளார் என்றும், சுமார் 10 வருடங்களாக தாவா காலி இடத்தில கூரைச் சாளை அமைத்து குடியிருந்து வந்து பின்னர் மேற்படி கூரைச் சாளையை பிரித்து விட்டு ரூ.10,00,000/-(10 லட்சம்) செலவு செய்து சிமெண்ட் கான்கிரீட் வீடு எதிர்மனுதாரர்களால் கட்டப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்ட நிலையில் எதிர்மனுதாரர்கள் கூறியது போல் தாவா சொத்தில் எதிர்மனுதாரர்கள் செலவு செய்து கட்டிய வடபுறம் உள்ள வீட்டில் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியம் உள்ளதா என்பதையும், எதிர்மனுதாரர்கள் மேற்படி வீட்டை கட்ட செலவு செய்த ரூபாய் 10 லட்சத்தை மனுதாரர் திருப்பிக் கொடுப்பதாக கூறப்பட்டு மனுதாரர் அனுமதியுடன் எதிர்மனுதாரர்கள் வீடு கட்டி அதில் குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார்களா என்பதையும், உரிய இருதரப்பு சாட்சிய விசாரணைக்குப்

பிறகே முடிவு செய்ய இயலும்.

6.6. இருப்பினும், தாவாச் சொத்தின் மீதான உரிமையை மனுதாரரிடம் உள்ளது என்பதை எதிர்மனுதாரர் மறுக்காத நிலையில், தாவாச் சொத்தை எதிர்மனுதாரர்கள் காலி செய்து மனுதாரரிடம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று, அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அசல் வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்பாணை பிறப்பிக்கும் வரை, எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தின் அமைப்பையும், தன்மையையும் மாற்றக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரருக்கு முதல் தோற்ற வழக்கு **(Prima facie Case)** உள்ளது என்பதையும், மனுதாரர் தரப்பில் சமநிலை வாய்ப்பும் **(Balance of convenience)** உள்ளது என்பதையும், இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்காதபட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு **(Irrepairable loss)** ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதையும், மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. இறுதியாக, அசல் வழக்கு முடியும் வரை மனுச் சொத்தின் அமைப்பையும், தன்மையையும் மாற்றக்கூடாது என எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை

District Munsif Court, Palani.
I.A.No.1-2024 in O.S.No.58-2024

திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 10 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/—சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் : இல்லை

மனுதாரர் தரப்புசான்றாவணங்கள் :

வ.எண்.	தேதி	விபரம்	தன்மை
ம.சா.ஆ.1	11.11.1998	மனுதாரர் பெயரில் கிரைய ஆவணம்	அசல்
ம.சா.ஆ.2	07.03.2023 மற்றும் 28.04.2023	மனுதாரர் பெயரில் வீட்டு வரி ரசீதுகள்(வரிசை 2)	அசல்
ம.சா.ஆ.3	28.04.2023	மனுதாரர் பெயரில் மின் கட்டண ரசீது	அசல்
ம.சா.ஆ.4	20.01.2024	மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய பதிவஞ்சல் நோட்டிஸ்	அலுவலக நகல்
ம.சா.ஆ.5	24.01.2024	எதிர்மனுதாரர்கள் மேற்படி நோட்டிசை பெற்றமைக்கான ஒப்புகை அட்டை—2	அசல்
ம.சா.ஆ.6	02.04.2024	மனுச் சொத்திற்கான அரசு வழிகாட்டு மதிப்பு	கணினி நகல்
ம.சா.ஆ.7	08.04.2024	தாவா மாதிரி வரைபடம்	அசல்

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை.

ஒம்/—சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

Date:08.09.2025